## குளச்சல் நகராட்சி

குளச்சல் நகராட்சி மன்றத்தின் அவசரக்கூட்டம் 2017–ம் ஆண்டு ஜுலை மாதம் 5–ம் தேதி (05.07.2017) புதன்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்ற கூட்ட அரங்கில் வைத்து நடைபெற்றது . கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு,

**பொருள் எண்.1**

பொதுச் சுகாதார நலன் கருதி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் ஆங்காங்கே தேங்கியுள்ள குப்பைகளை வாடகை JCB மூலம் அகற்றும் பணியைச் செய்வதற்கு மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகள் நேரிடையாக பெறப்பட்டது. மேற்படி விலைப்புள்ளிகள் விவரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| | | விலைப்புள்ளி விவரம் ஒரு மணி நேரத்திற்கு |
|---|---|---|
| 1. | ராஜன் ஏஜென்சிஸ் கருங்கல் | ரூ. 950/– |
| 2. | ஜோசப் கிருபை ஏஜென்சி குளச்சல் | ரூ. 900/– |
| 3 | ஷாஜி ஏஜென்சீஸ் ரீத்தாபுரம் | ரூ. 930/– |

மேற்படி பெறப்பட்ட மூன்று உள்ளூர் விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜோசப் கிருபை ஏஜென்சியின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்கப்பட்டதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.998/2017/எச்1

**தீர்மானம் எண்.1682 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.2**

இந்நகராட்சிக்கு சொந்தமான பெருந்தலைவர் காமராஜர் பேருந்து நிலைய நுழைவு கட்டணம் வசூல் செய்வதற்கு 2017–18–ம் ஆண்டுக்கு தேவையான ரெசீதுகள் அச்சடிக்கவும் அதற்காகும் உத்தேச செலவுத்தொகை ரூ.25,000/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.11062/2015/அ1

**தீர்மானம் எண்.1683 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.3**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு மினி லாரி எண்.TN-74-7-5508-ல் கியர்பாக்ஸ் பழுது ஏற்பட்டு வாகனம் இயக்க முடியாமல் உள்ளதால் அதனை உடனடியாக பழுது நீக்கம் செய்யவும் அதற்கான உத்தேச செலவு தொகை ரூ.17000/—க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2913/2009/எச்1

**தீர்மானம் எண்.1684 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.4**

குளச்சல் நகராட்சியின் 2016—17—ம் ஆண்டுக்கான நிர்வாக அறிக்கை தயாரிக்கப்பட்டு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

ந.க.எண்.1921/2004/சி1

**தீர்மானம் எண்.1685 பார்வையிட்டு பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி பொது சுகாதாரப் பிரிவிற்கு தேவையான கிருமி நாசினிகள் இருப்பில் குறைவாக உள்ளதால் பொது சுகாதார பயன்பாட்டிற்கு 2017—18—ம் ஆண்டுக்கு தேவையான கீழ்க்காணும் பொருட்கள் வாங்குவதற்கும் உத்தேச செலவுத் தொகை ரூ.200000/—க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

1. நீர்த்த சுண்ணாம்புத்தூள் – 5000 கிலோ
2. பிளீச்சிங பவுடர் – 3000 கிலோ
3. பினாயில் – 1000 லிட்டர்

ந.க.எண்.1388/2009/எச்1

**தீர்மானம் எண்.1686 அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.6**

இந்நகராட்சி குடிநீரேற்றும் நிலையங்களில் நிறுவப்பட்டுள்ள 200 KVA, 62.50 KVA. 50 KVA மற்றும் 30 KVA ஜெனரேட்டர்களின் 2017–18–ம் ஆண்டு, வருடாந்திர பராமரிப்பு பணிகளைச் செய்ய மதிப்பீட்டுத் தொகை ரூ.1,50,000/–க்கு மன்றத் தீர்மானம் எண்: 1654 நாள் :26.05.2017–ன் மூலம் ஏற்கனவே மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணிகளைச் செய்ய 23.06.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| | | |
|---|---|---|
| 1. | M/S. R.J. Power, Marthandam | மதிப்பீட்டு விகிதம் |
| 2. | M/S. Annai Generators, Nagercoil | மதிப்பீட்டை விட 12.74% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/S. R.J. Power, Marthandam நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டு விகித ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.567/2017/இ2

**தீர்மானம் எண்.1687 அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.7**

மாவட்ட ஆட்சியர் மற்றும் பெருந்தலைவர் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, நாகர்கோவில் அவர்களின் நடவடிக்கைகள் செ.மு.எண்.ஆ3/5184/2016, நாள்: 22.06.2017–ன் மூலம், இந்நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை அரசு உயர்நிலைப்பள்ளிக்கு 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் (R.O Plant ) அமைத்தல் பணியினை ரூ.1.20 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு நிர்வாக அனுமதி வழஙகப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.872/2017/இ1

**தீர்மானம் எண்.1688 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சி உரக்கிடஙகில் கடந்த 19.02.2017 அன்று தீ விபத்து ஏற்பட்டதை தொடர்ந்து, கல்குளம் வட்டாட்சியரால் உரக்கிடஙகின் எல்கையை நிர்ணயம் செய்திட அறிவுறுத்தப்பட்டதால், தலைமை அளவர் மூலம் உரக்கிடஙகின் எல்கை நிர்ணயம் தொடர்பாக இட ஆய்வு செய்யப்பட்ட போது, உரக்கிடஙகிற்கு தென்பகுதியில் சுமார் 300 மீ நீளத்திற்கு மேல் முட்புதர்கள் சூழ்ந்து மேற்படி பகுதிக்குள் செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. எனவே

உரக்கிடஙகின் எல்கை நிர்ணயம் செய்யப்பட வேண்டியதன் அவசர அவசியம் மற்றும் முக்கியத்துவத்தை கருத்தில் கொண்டு, மேற்படி பகுதியில் JCB இயந்திரம் மூலம் முட்புதர்களை அகற்றும் பணியினை நகராட்சி சட்ட பிரிவு 15–ன் கீழ் மேற்கொண்டு, அதற்கான செலவினம் ரூ.37,800/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து 23.06.2017 அன்று வழஙகியுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.556/2017/இ1

**தீர்மானம் எண்.1689 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்:17–ல் களிமார் மகாவிஷ்ணு கோவில் அருகில், பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் : 2015–16–ன் கீழ் கட்டப்பட்டுள்ள படிப்பக கட்டிடத்தில் கூடுதலாக குடிநீர் வசதி கழிவுநீர் தொட்டி வட்டுகள், மழைநீர் குழாய்கள் மற்றும் மின் விசிறிகள் பொருத்துதல் பணிகளை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.24,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1071/2017/இ1

**தீர்மானம் எண்.1690 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சிக்கு சொந்தமான உப்பளம் பகுதி உரக்கிடஙகில் கடந்த 19.02.2017 அன்று ஏற்பட்ட தீ விபத்தை தொடர்ந்து, தீயணைப்பு துறை மூலம் தீயணைக்கும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. ஆனால் தீ வேகமாக பரவியதால், தீயை அணைப்பதற்கு வசதியாக குப்பைகளை கிளறுவதற்கு Hitachi வாகனம், தண்ணீர் லாரி மற்றும் Diesel Motor தேவைப்பட்டதால், பணியின் அவசர அவசியம் கருதி, மேற்படி வாகனம் மற்றும் Diesel Motor ஆகியவற்றை வாடகை எடுத்து, நகராட்சி சட்ட விதி 15–ன் கீழ் தீயணைக்கும் பணியினை மேற்கொண்டு, அதற்கான செலவு தொகை ரூ.73988/–ஐ இந்நகராட்சி பொதுநிதியிலிருந்து 30.06.2017 அன்று வழஙகப்பட்டுள்ள விவரம் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.555/2017/எச்1

**தீர்மானம் எண்.1691 பதிவு செய்யப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் துப்புரவு பணியாளர்களை கௌரவிக்கும் பொருட்டு அனைத்து துப்புரவு பணியாளர்களுக்கும், துப்புரவு பணி மேற்பார்வையாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்களுக்கும் 09.06.2017 அன்று நடைபெற்ற விழாவில் உணவு மற்றும் பரிசு வழங்கப்பட்ட வகையில் ரூ.8840/—ஐ SBM திட்ட நிதியில் இருந்து வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.362/2017/எச்1

**தீர்மானம் எண்.1692 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.12**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு துப்புரவு பணியாளர்கள் தோற்றுவிக்கப்பட்ட பணியிடங்கள் 50 ஆகும். தற்போது 9 பணியிடங்கள் காலியாக உள்ளது. மேலும் 30.06.2017—ல் திரு.எம்.அருளானந்தம் துப்புரவு பணியாளர் ஓய்வு பெற உள்ளதால் மொத்தம் 10 பணியிடங்கள் காலியாக உள்ளது. நகராட்சிக்கு உட்பட்ட வார்டுகள் மொத்தம் 24. இதில் துப்புரவு பணிகள் மேற்கொள்வது மிகவும் சிரமமாக உள்ளது.எனவே அனுமதிக்கப்பட்ட பணியிடங்களுக்குட்பட்டு காலியாக உள்ள 10 பணியிடங்களை ஒப்பந்த அடிப்படையிலோ அல்லது சுய உதவிக் குழுக்கள் மூலமாகவோ மாவட்ட ஆட்சியர் தினக்கூலி பட்டியலில் தெரிவிக்கப்பட்டுள்ள விலை விகிதப்படி நியமனம் செய்து கொள்ள நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் அனுமதி பெறுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1368/2014/எச்1

**தீர்மானம் எண்.1693 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.13**

இந்நகராட்சி குடிநீர் லாரி TN 74 Z 5304—ன் தகுதி சான்றினை புதுப்பிப்பதற்காக, மார்த்தாண்டம் வட்டார போக்குவரத்து அலுவலகத்தில் செலுத்தப்பட்ட பசுமை வரி தொகை, சோல் பிரிண்ட் , புகை பரிசோதனை, ஸ்டிக்கர், வேகக்கட்டுப்பாடு கருவி புதுப்பித்தல் சான்று ஆகியவை வாங்கிய வகையில் செலுத்தப்பட்டுள்ள தொகை ரூ.5080/—ஐ நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.5754/2010/இ1

**தீர்மானம் எண்.1694 அனுமதிக்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன் சந்தை வளாகத்தில், சிறு வியாபாரிகள், காய்கறி வகைகள் மற்றும் மீன் விற்பனை செய்பவர்கள் வெயிலில் அமர்ந்து வியாபாரம் செய்வதால், காய்கறி மற்றும் மீன் பொருட்கள் வெயிலினால் சேதமடைந்து, வியாபாரிகள் மிகவும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். மேலும் பொதுமக்களும் இதனால் மிகுந்த சிரமத்திற்குள்ளாகியுள்ளனர். எனவே வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பகுதியில் நிழற்கூரை ( Colour Roofing Sheet ) அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கு தயார் செய்யப்பட்டுள்ள மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/—க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1098/2017/இ1

**தீர்மானம் எண்.1695 அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.15**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற திரு.க.இளஞ்செழியன், நகராட்சி பொறியாளர் மற்றும் திரு.எம்.அருளானந்தம், துப்புரவு பணியாளர் ஆகியோர்களுக்கு சிறப்பு சேமநல நிதி நகராட்சி பஙகளிப்புத் தொகை ரூ.10000/— வீதம் 2 நபர்களுக்கு ரூ.20000/— வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1055/2017/சி1

**தீர்மானம் எண்.1696 அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண்.1

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் நவீன மீன் மார்க்கெட் சந்தையில் உள்ள முதல் தள கடைகளுக்கு 06.07.2017–ல் நடைபெற்ற ஏல விபரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1–க்கு) | நகராட்சி பொறியாளர் நிர்ணயம் செய்யப்பட்ட அரசாங்க மதிப்பு (மாதம் 1–க்கு) | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரர் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| **முதல் தளம் கடை எண்.1** | | | | |
| 1 | T.ராஜ குமாரி | 13,700 | 12,291 | T.ராஜ குமாரி 13,700 |
| 2 | வினித் குமார் | 13,600 | | |
| **முதல் தளம் கடை எண்.3** | | | | |
| 1 | L.லெனின் குமார் | 11,100 | 10,683 | |
| 2 | A.சசி | 11,200 | | A.சசி 11,200 |
| **முதல் தளம் கடை எண்.7** | | | | |
| 1 | I.எட்வின் ஜோஸ் | 13,100 | 12,291 | |
| 2 | A.ஜெஸ்லின் சுஜின் | 13,000 | | I.எட்வின் ஜோஸ் 13,100 |

மேற்படி கடைகளுக்கு ஒப்பந்தப்புள்ளி எவரும் அளிக்கவில்லை. மேற்படி 3 கடைகளில் கலம்–5–ல் கொடுக்கப்பட்டுள்ள ஏலத்தாரர்கள் அதிகபட்ச ஏலக்கேள்வி கேட்டுள்ளதால் அதனை ஒப்புக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேலும் முதல் தளம் கடை எண்.2,4,5,6 கடைகளுக்கு வைப்புத்தொகை செலுத்தி எவரும் ஏலம் கோராததால் மறு ஏலம் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.1697 கலம் 5–ல் தெரிவிக்கப்பட்ட உயர்ந்த பட்ச ஏலக்கேள்வி ஒப்புக் கொள்ளப்பட்டது.**

பொருள் எண்.2

அரசாணை நிலை எண்.390 நாள்: 07.11.2012–ன் படி, இந்நகராட்சியில் பணிபுரிந்து எவ்வித குறைபாடுமின்றி 25 வருடங்கள் நிறைவு செய்துள்ள கீழ்க்காணும் 3 பணியாளர்களுக்கு ஒரு நபருக்கு ரூ.2000/– வீதம் 3 பணியாளர்களுக்கு 6000/–ஐ இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகுவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

| வ.எண் | பெயர் | பதவி | 25 வருடஙகள் நிறைவு செய்த நாள் |
|---|---|---|---|
| 1 | வ.உபைஸ் | ஓட்டுநர் | 28.02.2016 |
| 2 | L.பிரபாகரன் | மின் கம்பியாளர் | 10.11.2014 |
| 3 | R.ஜரின் | துப்புரவு பணி மேற்பார்வையாளர் | 25.03.2017 |

ந.க.எண்.1714/2014/சி1

**தீர்மானம் எண்.1698 அனுமதி வழஙகப்பட்டது.**

பொருள் எண்.3

இந்நகராட்சிக்கு சொந்தமான நவீன மீன்சந்தை வளாகத்தில் நிழற்கூரை ( Colour Roofing Sheet) அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5,00,000/– க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றத் தீர்மானம் எண்.1695, நாள்: 05.07.2017–ன் மூலம் மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணியைச் செய்ய 12.07.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின்வருமாறு,

| வ.எண் | ஒப்பந்தக்காரர் பெயர் | டென்டர் விகிதம் |
|---|---|---|
| 1. | திரு.C.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.08% குறைவு |
| 2. | திரு.T.சுகுமாரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 1.06% அதிகம் |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், திரு.C.செல்லநாடார் ஒப்பந்ததாரர், மதிப்பீட்டை விட 0.08% குறைவாக அளித்துள்ள ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**தீர்மானம் எண்.1699 அனுமதி வழஙகப்பட்டது.**

ந.க.எண்.1098/2017/இ1

பொருள் எண்.4

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயஙகி வரும் மினிலாறி எண்.TN-74-T-5508-ன் கியர் பாக்ஸ் பழுது ஏற்பட்டு வாகனம் இயக்க முடியாத நிலையில் பழுதுகளை சரி செய்திட ரூ.17000/– மதிப்பீட்டிற்கு இந்நகர்மன்ற தீர்மானம் எண்.1684, நாள்: 05.07.2017–ல் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் கீழ்க்காணும் விவரப்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் பெறப்பட்டது.

1. கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ் } மதிப்பீட்டு விலை விகிதம்

நாகர்கோவில்
2. ஸ்ரீ வினாயகர் மோட்டார் ஒர்க்ஸ்
அம்பாசமுத்திரம் } மதிப்பீட்டை விட 6.04% அதிகம்

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளியினை அளித்துள்ள கணேஷ் மோட்டார் ஒர்க்ஸ், நாகர்கோவில் மதிப்பீட்டு விலை விகிதத்திற்கு கொடுத்துள்ளதை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.2913/2009/எச்1

**தீர்மானம் எண்.1700 அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.5**

இந்நகராட்சி கணிணி பிரிவில் தட்டச்சர் பயன்படுத்தும் பிரிண்டர் பழுதடைந்துள்ளது. எனவே மேற்படி பிரிண்டரை பழுது நீக்கம் மேற்கொள்வதற்கும் அதற்கான செலவினத் தொகை ரூ.3900/–க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.544/2006/அ2

**தீர்மானம் எண்.1701 அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.6**

குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு 24–க்கு உள்ளாட்சி தேர்தல் 2017–க்கு நடைபெறவிருக்கும் தேர்தலுக்கு புகைப்படத்துடன் கூடிய வாக்காளர் பட்டியல் அச்சிடப்பட்டு பெறப்பட்ட வகையில் மாவட்ட ஆட்சித் தலைவர், நாகர்கோவில் அவர்களின் கடித ந.க.எண்.வ4/28143/2017, நாள்: 04.07.2017–ன் படி Hameedheen Printer's அவர்களுக்கு ரூ.2471/– வழஙக செலவினப் பட்டியல் பெறப்பட்டுள்ளதால் மேற்படி தொகை வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1051/2016/அ2

**தீர்மானம் எண்.1702 அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.7**

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2016–17–ன் கீழ், இந்நகராட்சிக்குட்பட்ட இலப்பவிளை அரசு உயர்நிலைப் பள்ளிக்கு 50 லிட்டர் கொள்ளளவு கொண்ட சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் திட்டம் (RO Plant) அமைத்தல் பணியினை ரூ.1,20,000/– மதிப்பீட்டில் மேற்கொள்வதற்கு 18.07.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| வ.எண் | ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள நிறுவனத்தின் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1 | M/s. Crysta Watekk, No:18/3A, k.k. Nagar,% Coimbatore | மதிப்பீட்டை விட 0.20 % குறைவு |
| 2 | M/s.Ensure Technologies, 82. Poolavaadi Thottam Near Nehru College Coimbatore | மதிப்பீட்டை விட 1.94 % குறைவு |

மேற்காணும் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில், M/s. Crysta Watekk, Coimbatore நிறுவனம் அளித்துள்ள மதிப்பீட்டை விட மதிப்பீட்டை விட 0.20 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டபப்படுகிறது.

ந.க.எண்.872/2017/இ1

**தீர்மானம் எண்.1703 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.8**

இந்நகராட்சியில், மாநில சமச்சீர் வளர்ச்சி நிதி 2014–15 திட்டத்தின் கீழ், ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் நிறுவப்பட்டுள்ள 250KVA திறன் கொண்ட டீசர் ஜெனரேட்டரை Erection & testing Commissioning செய்வதற்கும் Platform அமைக்கும் பணியினை மேற்கொள்வதற்கும் தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.3,80,000/–க்கு, இந்நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி 03.07.2015–ல் பெறப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டதற்கும், மேற்படி பணிக்கான செலவினத்தை இந்நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்கவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1619/2015/இ1

**தீர்மானம் எண்.1704 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.9**

இந்நகராட்சிக்கு சொந்தமான டாக்டர் அம்பேத்கார் நவீன மீன் மார்க்கெட்டில் உள்ள முதல்தள கடைகளுக்கு 25.07.2017–ல் மறு ஏலம் நடைபெற்றதில், முதல் தளம் கடைகளின் ஏலம் விபரம் பின்வருமாறு தெரிவிக்கப்படுகிறது.

| வ.எண் | பெயர் | கேட்கப்பட்டுள்ள ஏலக்கேள்வி (மாதம் 1–க்கு) | நகராட்சி பொறியாளர் நிர்ணயம் செய்யப்பட்ட அரசாங்க மதிப்பு (மாதம் 1–க்கு) | உயர்ந்தபட்ச ஏலக்கேள்வி மற்றும் ஏலத்தாரார் பெயர் |
|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 |
| முதல் தளம் கடை எண்.4 | | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | L.லெனின் குமார் | 6600 | 6372 | |
| 2 | L.கிரிஜா | 6700 | | L.கிரிஜா<br>6,700 |
| முதல் தளம் கடை எண்.6 | | | | |
| 1 | J.P.கென்னடி | 6600 | 6372 | |
| 2 | G.ஜெயசீலன் | 6700 | | G.ஜெயசீலன்<br>6700 |

முதல் தளம் கடை எண்.2,5 ஆகிய கடைகளுக்கு எவரும் டெபாசிட் செலுத்தவில்லை.

மேற்படி 4 கடைகளுக்கும் ஒப்பந்தப்புள்ளிகள் எவரும் அளிக்கவில்லை. அரசாங்க மதிப்பை விட ஏலத்தெகை கூடுதலாக உள்ளதால் மேற்படி கடைகளில் கலம் 5–ல் கொடுக்கப்பட்டுள்ள அதிகபட்ச ஏலத்தொகையினை ஒப்புக்கொண்டு கடையினை ஒப்படைக்க மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

ந.க.எண்.216/2017/அ1

**தீர்மானம் எண்.1705 அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.10**

இந்நகராட்சியில் பணிபுரிந்து வரும் துப்புரவுப் பணியாளர்கள் தெருக்களில் சேரும் குப்பைக் கழிவுகள், தூசி மணல்கள், சந்தை மற்றும் பேருந்து நிலையங்களில் சேரும் திடக்கழிவுகளை அகற்றுதல் வடிகால்களில் தூர் வாருதல் போன்ற அத்தியாவசிய பணிகளை சுற்று சூழலுக்கு பாதிப்பு ஏற்படாதவாறு பொதுமக்களின் சுகாதாரத்திற்காக துப்புரவு பணி பார்த்து வரும் பணியாளர்களுக்கு அடிக்கடி உடல் நலக்குறைவு ஏற்படுவதால் இந்நகராட்சியில் பணிபுரியும் பணியாளர்களுக்கு நகராட்சி பஙகளிப்புடன் சிறப்பு ஆயுள் காப்பீட்டுத் திட்டம் செயல்படுத்த அரசைக் கோருவதற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1195/2017/எச்1

**தீர்மானம் எண்.1706 அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.11**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவு டெஙகு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கை பணிகள் அபேட் மருந்து தெளித்தல், புகை மருந்து அடித்தல் ஆகிய பணிகளை மேற்கொள்ள DBC பணியாளர்களை 2 மாதஙகளுக்கு மட்டும் சுய உதவிக்குழுக்களின் மூலம் பணியமர்த்தமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் மற்றும் துணை இயக்குநர் சுகாதார பணிகள், நாகர்கோவில் அவர்களால் நடத்தப்பட்ட பல்வேறு ஆய்வுக் கூட்டஙகளில் அறிவுறுத்தப்பட்டதன் படி 15 பணியாளர்களை சுய உதவிக்குழுக்களின் மூலம் பெற்று டெஙகு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் அதற்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண்.1182/2017/எச்1

**தீர்மானம் எண்.1707 அனுமதி வழஙகப்பட்டது.**

பொருள் எண்.12

இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளுக்கு 21 ஆழ்துளை கிணறுகளிலிருந்து மின் மோட்டார் மூலம் 10 மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் ஏற்றப்பட்டு குடிநீர் விநியோகம் சீராக செய்யப்பட்டு வருகிறது.

தற்போது நிலவும் வறட்சியின் காரணமாக அடிக்கடி ஏற்படும் லைன் உடைவு, மின் மோட்டார் பழுது Valve-கள் பழுது ஆகியவற்றை உடனுக்குடன் சரி செய்ய வேண்டிய நிலையில் 2017–18–க்கு மேற்கண்ட பழுதுகளை உடனுக்குடன் சரி செய்து சீரான குடிநீர் வழஙகுவதற்கு மதிப்பீட்டு தொகை ரூ.5.00 லட்சம் மட்டுமே மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. மேலும் தற்போது மேற்கண்ட தொகையில் மிக குறைந்த அளவே தொகை மீதம் உள்ளதால் மீண்டும் மதிப்பீட்டு தொகை ரூ.5.00 லட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். இ2 /2017/1041

**தீர்மானம் எண்.1708 அனுமதி வழங்கப்பட்டது.**

பொருள் எண்.13

இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17–ல் களிமார் மகாவிஷ்ணு கோவில் அருகில், பாரளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் கட்டப்பட்டுள்ள படிப்பக கட்டிடத்தில் கூடுதல் பணிகள் மேற்கொள்வதற்காக தயார் செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.24,000/–க்கும், மேற்படி பணியினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்வதற்கும் மன்றம் தனது தீர்மானம் எண்.1690 நாள்:05.07.2017–ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் மேற்படி பணியினை மேற்கொள்வதற்கு 21.07.2017 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், பெறப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகள் குறித்த விவரம் பின் வருமாறு,

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டு விகிதம் |
|---|---|---|
| 1. | திரு. T.சுகுமாரன் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.02 % குறைவு |
| 2. | திரு. C.செல்லநாடார் ஒப்பந்ததாரர் | மதிப்பீட்டை விட 0.33 % குறைவு |

மேற்படி இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. T.சுகுமாரன் ஒப்பந்ததாரர் அளித்துள்ள மதிப்பீட்டை விட 0.02 % குறைவான ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழஙக மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். இ1 /2017/1071

**தீர்மானம் எண்.1709 அனுமதி வழங்கப்பட்டது.**

**பொருள் எண்.14**

இந்நகராட்சி ஈப்பு வாகனம் TN 74 V 3530 –ல் Mahindra & Mahindra –வின் அங்கீகாரம் பெற்ற M/S.KODAI CARS (P) LTD., நிறுவனத்தின் மூலம் பராமரிப்பு பணிகள் மேற்கொள்வதற்கும், பணியின் அவசர அவசியம் கருதி, மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி பணி உத்தரவு வழஙகியதற்கும், அதற்கான உத்தேச செலவினம் ரூ.1,05,000/–ஐ இந்நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்வதற்கும், மன்றம் தனது தீர்மானம் எண்.1634, நாள்: 30.03.2017–ன் மூலம் ஒப்புதல் அளித்துள்ளது. அதன் அடிப்படையில் M/S.KODAI CARS (P) LTD., Tirunelveli நிறுவனத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டதில் கூடுதலாக சில அத்தியாவசிய பணிகள் செய்யப்பட்டதால் கீழ்காணும் விவரப்படி பட்டியல் வரப்பெற்றுள்ளது.

| **Sl.No** | **Bill No** | **Description** | **Amount (Rs.)** |
|---|---|---|---|
| 1. | RBR 18 A 003193 | Parts Amount | 41,454/- |
| 2. | RBR 18 A 000977 | Labour Charges | 51,773/- |
| 3. | RBR 18 A 004252 | Parts Amount | 15,539/- |
| 4. | RBR 18 A 004253 | Labour Charges | 6,318/- |
| | | **Total** | **115084/-** |

மேற்படி வாகனத்தின் பராமரிப்பு பணிகளுக்கான உத்தேச செலவினம் ரூ.1,05,000/–மட்டும் மன்ற ஒப்புதல் பெறப்பட்டுள்ளதால், தற்போது வரப்பெற்றுள்ள பட்டியல் தொகை ரூ.115084–ல் கூடுதல் செலவினம் ரூ.10084/– க்கும், மேற்படி தொகையை நகராட்சி பொது நிதியிலிருந்து வழஙகவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். இ1 /2017/5030

**தீர்மானம் எண்.1710 அனுமதி வழஙகப்பட்டது.**

**பொருள் எண்.15**

இயக்குநர் தமிழ்நாடு நகரியல் பயிற்சி நிறுவனம் கோயம்புத்தூர் அவர்களின் கடித ந.க.எண்.359/17/அ2 நாள்: 07.07.2017–ன் படி 2017–18–ம் ஆண்டிற்கு இந்நகராட்சியில் இருந்து செலுத்த வேண்டிய பஙகுத்தொகை ரூ.50,000/–ம் செலுத்த தெரிவிக்கப்பட்டது. அதன்படி 2017–18–ம் ஆண்டிற்கான பஙகுத்தொகை ரூ.50,000/– செலுத்த மன்றம் அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். அ1 /2001/1542

**தீர்மானம் எண்.1711 அனுமதி வழஙகப்பட்டது.**

பொருள் எண்.16

இந்நகராட்சியில் தினசரி சேகரமாகும் 7MT குப்பைகள் உப்பளம் உரக்கிடஙகில் கொட்டப்பட்டு வந்த நிலையில் 19.02.2017 அன்று ஏற்பட்ட தீ விபத்தினை தொடர்ந்து பொதுமக்கள் எதிர்ப்பு தெரிவித்து கல்குளம் தாசில்தார் அவர்களால் உரக்கிடஙகிற்கு செல்ல இயலாத நிலை ஏற்பட்டது. அதன்பிறகு அவ்வப்போது மலைபோல் நகரெஙகும் தேஙகியிருந்த குப்பைகள் தனியார் வாகனம் மூலம் தனியார் நிலஙகளில் கொட்டப்பட்டது. கடைசியாக 08.05.2017 அன்று குளச்சல் நகர் முழுவதும் தேஙகியிருந்த குப்பைகள் அகற்றப்பட்டது. பின்னர் தேஙகிய குப்பைகள் தற்போது குளச்சல் மெயின் ரோடுகளிலும், தெருக்களிலும் மலைபோல் குவிந்துள்ளது. தற்போது மழை பெய்து கொண்டிருப்பதால் குப்பையில் இருந்து துர்நாற்றமும், தொற்று நோய் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது. ஆகவே தேஙகியிருக்கும் குப்பைகளை தனியார் மூலம் அப்புறப்படுத்தவும் அதற்காகும் செலவுத் தொகை ரூ.1,00,000/–க்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

ந.க.எண். எச்1 /2017/998

தீர்மானம் எண்.1712 அனுமதி வழஙகப்பட்டது.